பொருளாதார நிலை உயர்ந்தாலன்றி பொதுமக்கள் உய்ய வழியில்லை

Phone No 4502 Regd. No. M. 5458
விலை அரை அணு இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (8—4—50) வெளியூர் (9—4—50) [இதழ் 218

வறுமையும் அறியாமையுமே நோய்களுக்குக் காரணம்

நோய்களோடு போராடி வெற்றி காண்பதே ஆட்சியாளர் கடன்

டாக்டர் குருசாமி கருத்துரை

"வறுமை, அறியாமை, சத்தற்ற உணவு, இடவசதி இன்மை ஆகியவைகளே காசநோய் பரவுதற்குக் காரணமாயுள்ளன. இதை மருத்துவ மாணவர்களுக்கு உணர்த்தவேண்டுவது அவசியம். காசநோய்க்குரிய காரணங்கள் பலவற்றில் சில தனிப்பட்ட மனித முயற்சிகளால் நீக்கக்கூடியன; சில சமுதாயத்தினுல் நீக்கப்படவேண்டியவை. வேறு சில அரசியலாரால் தடுக்கப்பட வேண்டுவனவாகும். அரசியலார் எந்தத் திட்டத்தையும் மேற்கொள்ளும்போது மக்களின் பொருளாதார நிலையைப் பற்றிக் கவனிக்கவேண்டுவது முக்கியமாகும்"

இடவசதியைப் பொறுத்தவரையில், இரண்டே அறைகளில் மக்கள் குடியிருக்கும் நிலை மாற்றப்படவேண்டும். இம்முறையே நோய்களுக்குக் காரணமாகும். அன்ருெரு இந்தியப் பிரதமர் கூறியதுபோல், அந்நிய நாட்டாரை எதிர்த்துப் போரிடுவதற்காக இராணுவத்துக்குப் பணம் செலவழிக்கப்படுகிறது. ஆனால் உள்நாட்டில் மக்களைக் கொன்று வரும் கொடிய நோய்களை எதிர்த்துப் போராட பணமில்லை என்கிருர்கள். இந்நிலை மாறவேண்டும். வசதியான வீடுகளை அமைக்கமுடிந்த வரையில் பாடுபடவேண்டும்.

இ[illegible] செ[illegible] [illegible] ஆராய்ச்சிக் கழக ஆண்டுவிழாவில், டாக்டர் எம். ஆர். குருசாமி அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள்.

தோழர் குருசாமி மருத்துவத் துறையிலே சிறந்து விளங்கும் ஓர் அறிஞர். அப்படிப்பட்ட அறிஞரின் கருத்துரைகள் மருத்துவத் துறையில் ஈடுபட்டிருப்போர்மட்டுமின்றி ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போரும் ஊன்றிகவனிக்க வேண்டியனவாகும்.

அவர், நோய்நாடி, நோய் முதல்நாடி, அது தணிக்கும் வாய்நாடி வழி வகைகளைத் தெரிவிக்கிருர். அங்ஙனம் அவர் தரும் கருத்துரைகள் மூன்று அதாவது நோய்களை முறியடிக்க தனிப்பட்டோர் முயற்சி, சமுதாயத்தின் முயற்சி அரசியலார் முயற்சி என மூ[illegible] [illegible] முயற்சிகள்பற்றி [illegible]ப்பிடுகிருர். இவற்று[illegible] இறுதியாகச் சொல்லப்படும் அரசியலார் முயற்சியே அனைத்துக்கும் அடிப்படை என்பதையும் அவர் வலியுறுத்திக் கூறுகிருர்.

அரசியலார் முயற்சி எது வாயிருத்தல் வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும்முகத்தான், அனைத்துக்கும் அடிப்படையாக வேண்டப்படுவது பொருளாதார வசதியே என்கிருர். எந்தத் திட்டத்தை அரசியலார் மேற்கொண்டாலும் இப்பொருளாதார நிலை சரியாக அமைந்துள்ளதா என்பதைக் கவனிக்கவேண்டும். நூற்றுக்குத் தொண்ணூறு நோய்கள் வறுமையின் காரணமாகவே உண்டாகின்றன அதிலும் காச நோய் போன்ற உள்ளத்தையும், உடலையும்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

தெ. ஆற்காட்டில் குஷ்டநோய் அதிகரிக்கிறது

மக்கள் ஒத்துழைப்பு தேவையென வேண்டுகோள்

கடலூர், ஏப். 5—

"தென் ஆற்காடு ஜில்லாவில் குஷ்டநோய் கண்டவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்நோய் கண்டவர்களைத் தனியாக வைக்க வேண்டியது மிக அவசியமாகும். பொது மக்கள் போதிய முயற்சி எடுத்துக்கொண்டாலொழிய இவ்வியாதி பரவுவதைத் தடுக்க முடியாத காரியமாகும்" என்று பிரிட்டிஷ் சாம்ராஜ்ய குஷ்ட நிவாரண சங்கத்தின் கௌரவ காரியதரிசி தோழர் என். ஜகதீசன் கடலூரில் பேசும்போது கூறினர்.

தென் ஆற்காடு ஜில்லா குஷ்டநோய் நிவாரண சங்கத்தின் சார்பில் நடந்த இக்கூட்டத்திற்கு சென்னை அரசாங்க சர்ஜன் ஜனரல் டாக்டர் டேவிட் தலைமை வகித்தார்.

அரசாங்கத்தாராலும், தனிப்பட்டோராலும் இவ்வியாதியைத் தடுக்கத் தனிப்பட்ட ஆஸ்பத்திரிகள் இருந்தாலும் இன்னும் பல தேவைப்படுகின்றனவென்று தோழர் ஜகதீசன் அறிவித்தார்.

குஷ்ட நோய் தடுக்க அரசாங்கம் பெரிதும் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறதென்றும், பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமென்றும் டாக்டர் டேவிட் கூறினர்.

ஆருடத்தில் ஆசைகொள்ளும் ஆட்சியாளரைப் பாரீர்!

பண உதவி தருகிறேன் என்கிருர் பீகார் கவர்னர்

"ஆருடக் கலைக்கு ஆட்சியாளர் ஆதரவு கொடுக்கலாமா? அக்கலை வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட சாலைக்குப் பொருள் உதவி செய்வதாக ஒரு மாகாணத்தின் கவர்னர் உறுதி தரலாமா?" என்ற கேள்விகளைப் பீகாரிலுள்ள முற்போக்கு வாதிகளெல்லாம் இன்று கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் அவ்வாறு சந்தேகிப்பதற்குக் காரணம் மார்ச்சு 27ந்தேதி பாட்னுவிலுள்ள [illegible] [illegible]ச்சார்ய விஜா[illegible] [illegible]ம். [illegible]

[illegible]ஷிப்பித்துகொண்ட தோழர் கௌரிசங்கர் சோதிட வளர்ச்சிக்கு ரூ. 10000 நன்கொடையும் நிலயம் அமைக்க ஒரு சில நிலமும் கொடுப்பதாகக் கூறினர். அதை அடுத்து கவர்னர் ஆனே பேசுகையில், அரசாங்கத்தின் ஆதரவு சோதிட நிலையத்துக்கு இருக்குமென்றும், நிலயங் கட்டுவதற்கு அரசாங்கத்தின் உதவியையும் வாங்கித்தர முயற்சிப்பாரென்றும் கூறினுர்.

'சோதிடம்' உண்மைதானு, இல்லையா என்பது, நாம் ஆராயவேண்டுவதில்லை. சோதிடம், மாந்திரீகம் போன்றவற்றிற்குக் கவர்னர் பதவி வகிக்கும் ஒருவர் ஆதரித்துப் பேசலாமாவென்பதுதான் இப்பொழுது எழுப்பப்பட்டுள்ள கேள்வி. பணம் போதவில்லையென்று கூறி ஆக்க வேலைக்காக வகுக்கப்பட்ட பல திட்டங்கள் கைவிடப்படும் இந்நேரத்தில் சோதிட வளர்ப்புத் திட்டம் ஆதரிக்கப்படுவதேன்?

மந்தப் புத்தியுள்ளமக்கள் பலரை ஏய்த்துப் பிழைக்கும் "சோதிட விற்பன்னர்கள்" தோள்தட்டமாட்டார்களா, கவர்னரே ஆதரவு தருகிருரென்று?

வீடு மாறினுல் போலீஸுக்கு தெரிவிக்கவேண்டும்

புகாரெஸ்ட், ஏப். 7—

ருமேனியாவில் வசிப்பவர்கள் தங்கள் வசிக்கும் இடத்தை மாற்றினுல் இரண்டு நாட்களுக்குள் போலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பணிந்துவிட்டார்கள்!

தோழர் பிரகாசத்துடன் சட்டசபையில் தனியாக உட்காருவதாக முடிவு செய்திருந்த 15 சட்டசபை அங்கத்தினரில் இருவர் ஒழுங்கு நடவடிக்கை பயமுறுத்தலுக்குப் பயந்து மத்திய சட்டசபைக்கட்சியின் முடிவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்துவிட்டார்கள்.

[illegible]ரப்பர் நெருக்கடி தீர புதிய முறை

—(0)—

செயற்கை ரப்பரைத் தயாரிக்க அமெரிக்கா திட்டம்

லண்டன், ஏப். 7—

ரப்பர் சப்ளை நிலைமை பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது. இதனுல் அதன் விலை ஏகமாக அதிகரித்திருக்கிறது. 1928க்குப் பிறகு இப்பொழுதுதான் ரப்பர் ஒரு பவுண்டு ஒரு ஷில்லிங் 6 பென்ஸுக்கு விற்கப்படுகிறது. இந்தச் சப்ளை நெருக்கடியைச் சமாளிக்க அமெரிக்கா செயற்கை ரப்பர் தயாரிப்பதில் தீவிர சிரத்தைகாட்டும் என்று தெரிகிறது.

இந்த ரப்பர் சப்ளை நெருக்கடியினுல் ஏற்கனவே விற்றுவிட்ட கீழ்நாட்டு வியாபாரிகளுக்கு நஷ்டம் அதிகம் ஏற்படலாம் எனத் தெரிகிறது.

இந்த ரப்பர் விஷயமான பிரச்னை எல்லாம், மே மாதம் 2ந்தேதி பிரஸ்ஸல்ஸில் கூடும் ரப்பர் மகாநாட்டில் விவாதிக்கப்படும்.

மேற்கு கோளத்திலுள்ள இந்தியர்

புதுடெல்லி, ஏப். 6—

மேற்கு கோளத்தில் குடியேறியுள்ள இந்தியர் எண்ணிக்கை, நாடு வாரியாகப் பாராளுமன்றத்தில் உதவி அயல்நாட்டு மந்திரியால் அறிவிக்கப்பட்டது.

கனடா 3000; அமெரிக்கா 2405; பிரேஜில் 40; அர்ஜன்டைனு 600; டச்சு கயானு 56000; பனுமா 500; பிரிட்டிஷ் கயானு 180,129; பிரிட்டிஷ் ஹானடுராஸ் 1366; ஜெமேக்கா 22821; லீவர்ட தீவுகள் 99; ட்ரினிடாட் டொபாகோ 214177; ஃப்ளோரிடா 5000; செண்ட் லூசியா 2189.

இந்தியப் பல்கலைக் கழகங்களில் அந்நியர் படிக்க வசதி

மலேயாவிலிருந்து மனுக்கள் வந்துள்ளன

சிங்கப்பூர், ஏப். 7—

இந்தியப் பல்கலைக் கழகங்களில் அயல்நாட்டினர் படிக்க உபகாரச் சம்பளம் தர, இந்திய சர்க்கார் முன்வந்திருப்பதைப் பயன்படுத்திக் கொள்ள சிங்கப்பூரிலிருந்து 38 மாணவர்கள் மனுச்செய்து கொண்டிருக்கின்றனர்.

இம்மனுதாரர்களில் 25 பேர் இந்தியர்கள் 12 பேர்களை இங்குள்ள இந்தியப் பிரதிநிதி சிபார்சு செய்திருக்கிருர். இந்திய சர்க்கார் கொடுக்கவிருக்கும் உபகாரச் சம்பளம் 6 பேர்களுக்குத்தான். அதில் 4 இந்தியர்களுக்கு 2 இந்தியரல்லாதவருக்கு என்று தெரிகிறது.

நஷ்டஈடு ரூ. 52,000!

பர்மிங்காம், ஏப். 7—

ஒரு லாரி மோதி விபத்து ஏற்பட்டதால் ஒருவருடைய குழந்தை இறந்ததுடன், அவருமே (மூளைக் கோளாறுக்காரராக) மாறிவிட்டாராம். இதற்காக அவர் நஷ்டஈடு கோரி வழக்கு தொடர்ந்ததில் கோர்ட்டார் அவர் கட்சியை ஏற்று ரூ. 52,000 நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும் என்று உத்திரவிட்டனர்.

லண்டன், ஏப். 7—

லண்டனில் கூடவிருக்கும் காமன்வெல்த் கமிட்டி ஜப்பானிய சமாதான உடன்படிக்கை குறித்து ஆலோசிக்கும் என்றும், இதில் இந்தியாவும் பாகிஸ்தானும் முக்கிய பங்கை எடுத்துக்கொள்ளும் என்றும் தெரிகிறது.

மாலை மணி

சென்னை 8—4—50 சனிக்கிழமை

நல்வாழ்வு மலர

"ஆரோக்கியம் என்பது ஒவ்வொருவரின் அடிப்படையான வாழ்க்கை உரிமையாகும்" என்ற கருத்தை டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள், மிக நன்கு வலியுறுத்திக் கூறியுள்ளார், உலகசுகாதாரதினத்தையொட்டி சென்னையில் கூட்டப்பட்டக் கூட்டத்தில்.

அந்த வாழ்க்கையுரிமை இந்த நாட்டில் மிகப் பரிதாபகரமான நிலைமையில், வறுமையினாலும், நோயாலும் கொள்ளையடித்துக்கொண்டு போகப்படுகிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் விதவிதமான நோய்கள் மக்களின் வாழ்வைச் செல்லரித்து அதனை அற்பமான தொன்றாக ஆக்கிவருகின்றன. நோய்கள் ஏற்படாமல் தடுக்க, நல்ல சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு ஏற்ற அளவில் பொருளாதார வசதி மக்களிடம் நடமாடவில்லை—வறுமை தன்னால் முடிந்த மட்டும் வாட்டுகிறது.

இந்தியா உலக சுகாதாரக் கழகத்தோடு இணைந்து நின்று உலக சுகாதார தினத்தைக் கொண்டாடியுள்ளது. உலக சுகாதாரக் கழகத்தில் இந்தியா உள்பட 68 நாடுகள் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொருவரின் அடிப்படை வாழ்க்கை உரிமையாகிய ஆரோக்கியத்தைக் காப்பாற்றித்தருவதும், நல்ல உடலுறுதியோடு உயர்நெறியும், அன்புள்ளமும் நேர்மைப்பண்பும் மக்களனைவர்க்கும் ஏற்படும்படி பார்த்துக் கொள்வதும் ஆன செயல்களைச்செய்யவே, உலக சுகாதாரக்கழகம் ஏற்பட்டிருப்பதாகத் தோழர் டாக்டர்ஏ.எல் முதலியார் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்த நோக்கத்தை எந்த அளவுக்கு அந்தக் கழகம் நிறைவேற்றப் போகிறது என்பதும், அது கொடுக்கும் உதவிகளை இந்தியா எந்த அளவுக்குப்பயன்படுத்திக் கொள்ளப்போகிறது என்பதும் பொறுத்திருந்து பார்க்க வேண்டியவைகளாக இருக்கின்றன.

இந்தியா எப்படியோ நோய்களின் கண்காட்சி சாலையாக ஆகிவிட்டது. இந்தக் கோரக் காட்சியை அகற்றி, அமைதியான நல்வாழ்வை அமைக்க, இந்திய அரசாங்கம் பாடுபட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், உலகிலுள்ள மற்ற அறிவுயர்ந்த-வசதியுள்ள நாடுகள் போதுமான உதவிகளை நல்கமுன்வர வேண்டும். இராணுவத்திற்குச் செலவிட காட்டும அளவு அக்கரையில் ஒரு சிறு பகுதி அக்கரைகூட, சுகாதார வசதிகளை உண்டாக்குவதில் இந்தியா காட்டவில்லை. பிற டணம் படைத்த அமெரிக்கா போன்ற நாடுகளும் ஆயுதங்களை உதவியாக அளித்து, மற்ற நாடுகளை அடிமையாக்கிக்கொள்ள எண்ணுகின்றனவே யல்லாமல், நோய் தீர்க்கும் மருந்துகளை அனுப்பி மற்ற நாடுகளின் அனபைப்பெற முயலுவதில்லை. ஆதிக்கம் செலுத்தும் வல்லரசுகள், ஆயுதங்களையே பகடைக் காய்களாக உருட்டும்போது. அவற்றின் தயவில் வாழும் உலக சுகாதாரக் கழகம், எத்தனையளவு நன்மையை எண்ணியபடி உலகோர்க்குச் செய்ய முடியும்?

இந்தியாவை மலேரியா, க்ஷயரோகம், காசம், குஷ்டம், குன்மம் போன்ற கொடிய நோய்கள் அலக்கழித்து வருகின்றன. சென்னை மாநிலத்தில் மேற்குக் கடற்கரையோரத்தில், பரவிக் கிடக்கும் மலேரியாவைத் தடுப்பதற்கு வேண்டிய அளவு உதவி செய்ய, உலக சுகாதாரக் கழகம் வாக்களித்துள்ளதாக, அதே கொண்டாட்டக் கூட்டத்தில் தோழர் டாக்டர் டி. எஸ். எஸ். இராஜன் அவர்கள் கூறியுள்ளார் அத்தகைய நன்மை உள்ளபடியேகிடைக்குமாயின் போற்றி மகிழ்வதற்குரியது தான்.

நல்ல உணவு வகைகளும், நல்ல குடி தண்ணீர் வசதியும், நல்ல குடியிருப்பு இடமும் இல்லாத காரணத்தால்தான், பல நகரங்களில், தொத்து நோய்களும் ஈசல் போல் மலிந்து வருகின்றன. கலப்படமுள்ள எண்ணெய்களிலும், புழுத்து மக்கிப்போன பொருள்களிலும் உணவுப் பண்டங்கள் செய்யப்பட்டு அவைகளை உண்ணுவதாலும், அழுகி நாறிப்போன பழவகைகளை உட்கொள்வதாலும், கெட்டுப்போன நீரைப்பருக நேரிடுவதாலும் நோய்கள் பெருகக் காரணமாகின்றன என்று கூறப்படுகிறது. அரசாங்கத்தின் சுகாதார இலாகா இவற்றில் போதுமானகவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை-நாட்டின் நிலை அதைத் தான்தெளிவு படுத்திக் காட்டுகிறது.

'கந்தையானாலும் கசக்கிக் கட்டு'' என்ற அரிய போதனை புரியப்பட்டு, ''நோயற்ற வாழ்வே குறைவற்றசெல்வம் என்ற பழமொழி வழங்கப் பட்டுவரும் இந்நாட்டில்தான்' அறியாமையும், வறுமையும் சேர்ந்து மனித வாழ்வைச் சீர்குலைத்து வருகின்றன. ஏற்பட்டிருக்கும் நோய்களைத் தடுக்க வைத்தியசாலைகளும், நோய்கள் ஏற்படாமல் தடுக்க சுகாதார சாலைகளும் நிறுவும் முயற்சி மட்டோடு அமைந்துவிடாமல், அறியாமையையும், வறுமையையும் போக்க அரசாங்கமும், பொதுமக்களும் பாடுபட்டால் தான், நாட்டில், நோயற்ற வாழ்வாகிய குறையற்ற செல்வத்தைக் காணமுடியும். அப்படிப்பட்ட உறுதியான எண்ணத்தைக் கொள்ள உலக சுகாதார தினம் பயன்பட்டிருக்கும்—பயன்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

ஒவ்வொருவரும் ஆரோக்கியத்துடன் வாழ உரிமையுண்டு. —அந்த உரிமையை முழுவதும் நுகரவும், எளிதில் பயன்படுத்திக் கொள்ளவும் ஆன சூழ்நிலையை, ஒவ்வொருவருக்கும ஏற்படுத்தித் தரும் பொறுப்பை, நாடாள வந்திருக்கும் அரசாங்கம் நல்ல வழியில் உணர்ந்து, நல்லவழியில் ஏற்று, நல்லவழியில் செயலாற்ற வேண்டும் என்று வற்புறுத்திக்கூறுகிறோம். அப்படிப்பட்ட முயற்சிக்கு நல்லறிவாளர்களின் உதவி என்றென்றும் இருந்தே தீரும். அந்நிலை ஏற்பட்டால் நாட்டில் நல்வாழ்வு மலரும் என்பது திண்ணம்.

இந்து சட்டத்திருத்த மசோதா ஆதரிப்புத் தீர்மானங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:—

Dr. B. R. AMBEDHKAR,
Law Minister,
Central Secretariat.
NEW DELHI.

ஞாபகசக்தி நிபுணரின் ஞாபக மறதி!

நியூயார்க், ஏப். 7—

ஒரு புத்தகத்தின் ஒரு பக்கத்தை ஒரு தடவை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் போதுமாம். உடனே என்னால் கண்டதை ஞாபகத்தில் சொல்ல அப்படியே ஒப்பிப்பாராம் டாக்டர் க்ருனேபர்ஸ்ட் என்பவர்.

இவர் திறமையை வெளிப்படுத்த நெப்ராஸ்காவிலுள்ள ஓமாகா என்ற இடத்தில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் வெகு நேரமாகியும் டாக்டர் க்ருனே வரவில்லை. டாக்டருடைய ஏஜெண்ட் டெலிபோன் செய்கையில், க்ருனே இந்தக்கூட்டம்பற்றிய விஷயத்தையே மறந்துவிட்டார் என்று கூறினர்!

கோவையில் நெசவு ஆராய்ச்சி நிலையம்

சென்னை, ஏப். 7—

கோயமுத்தூரில் நெசவு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதாக இருந்தால் அதன் ஆரம்ப வேலைகளுக்காக 20-லிருந்து 25 லட்ச ரூபாய்வரை கொடுக்கத் தயாராக இருப்பதாகத் தென்இந்திய மில் தொழிலாளர்சங்கம் தோழர் [illegible] ஷண்முகம் செட்டி [illegible] அறிவித்தது.

பம்பாயிலும், கோயம்புத்தூரிலும் ஆராய்ச்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படுமென கமிட்டி முடிவு செய்துள்ளது.

கள்ளமார்க்கட் செய்ததாக
தேவுடு ஐயர் கைது

பெரியகுளம், ஏப். 5—

கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்தாரென்று குற்றஞ்சாட்டி, தேவுடு ஐயர் என்று கூறப்படும் நரசிம்ம ஐயர் என்னும் பெயருள்ள புத்தக வியாபாரி கைது செய்யப்பட்டார். விசாரணை நடத்திக் கைது செய்தவர்கள் பெரியகுளம் சப் இன்ஸ்பெக்டர்கள் தோழர்கள் எஸ். கணபதி நாயுடு, எஸ். ராமசாமி கோனார் ஆகியவர்களாவார்.

தி. மு. கழக
தலைமைக்காரியாலயம்

கட்டட அமைப்புச் செலவுக்காக தங்கள் அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா? இன்றே தருக!

பணம் அனுப்பவேண்டிய முகவரி:—

சி. என். அண்ணாத்துரை,
பொதுச் செயலாளர், தி. மு. க. தலைமை நிலையம்
2/45 முத்துமாரிச் செட்டித் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

பொருளாதார நிலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரித்துவரும் கொடிய நோய்கள் வறுமை என்னும் நிலத்திலேயே வளம்பட வளர்கின்றன. இதனைச்சுருங்கச்சொல்ல வேண்டுமானால், வறுமையினையே காசநோய் என்று சொன்னாலும் பொருந்தும். ஏனெனில், வறுமையுள்ள இடங்களில் காசநோயும், காசநோயுள்ள இடங்களில் வறுமையும் ஆக ஒன்றோடொன்று இணைந்து இருந்திடக் காண்கிறோம்.

இங்ஙனம் காசநோய்க்கு அடிப்படைக் காரணமாயிருக்கும் வறுமையை ஒழிக்க வேண்டுமானால், அது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஒன்றினாலேயே முடியும்.

செல்வர்களுக்குவரும் நோய்களைத் தீர்ப்பது தனிப்பட்ட பிரச்னை. நடுத்தர மக்களுக்கு வரும் நோய்களைத் தீர்க்கும் பிரச்னைசமுதாயத்தின்பிரச்னை இந்த இரு பிரிவிலும் அடங்காத ஏழை எளியவர்கட்கு வரும் நோய்களைத் தீர்க்க வேண்டியது அரசியலார் கடமை. அரசியலார் உதவியின்றி ஏழைமக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள இயலாது.

நம்நாட்டில், மேலே கூறப்பட்ட முப்பிரிவினருள் மூன்றும் பிரிவினராகிய ஏழையர் தொகையே மிகுதி. ஆகவே, அத்தகைய ஒரு பெருங்கூட்டத்தினரை நோயினின்றிகாப்பாற்ற, வாழவைத்து, அதன் மூலம் நாடுநலம்பெறச் செய்ய வேண்டுவது அரசியலார் கடன் இக்கடமை அரசியலார் எப்படி ஆற்றுவது எனின், கூடுமானவரையில் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே தமது முதல் நோக்கமாகக் கொள்ளுதல்வேண்டும். இந்தியப் பிரதமர் சொன்னதாக டாக்டர் குருசாமி குறிப்பிட்டிருப்பதுபோல், இராணுவத்திற்குச்செலவிடும்தொகையைச் சற்றுக் குறைத்து மக்களின் நல்வாழ்வுக்குச் சற்று அதிகமாகச் செலவிட முன்வரவேண்டும். இதனால் இராணுவ பலம்குறைந்துவிடுமோ என்று அஞ்சத்தேவையில்லை, பலகோடி ஏழையரை வறுமையில் வாட வைத்துவிட்டு இராணுவத்தை மட்டும் பலப்படுத்துதல் முறை அன்று. பொதுமக்களும் ஒரு வகைப் படைவீரர்களாவர்: அவர்களே நாட்டுக்கு அரண். இதை ஆட்சியாளர் உணர வேண்டும். மக்கள் நலத்தைப் பேணாமல் நடத்தப்படும் எந்த ஆட்சிமுறையும்செம்மையுரா. நாட்டின் உள்ளே பட்டினிப் பட்டாளத்தை வைத்துக் [illegible] வாயி [illegible] திய [illegible] பயன் என்ன? நாடு உள் [illegible] இல்லாமலன்றோ போகும்! அதுமட்டுமல்ல உள்ளேயிருக்கும்பட்டினிப்பட்டாளமனைத்தும் ஐந்தாம் படைகளாக மாறிவிட்டால், எந்த ஆட்சி தான்என்ன செய்ய இயலும்?

எனவே நாட்டின் பலம், மக்களின் நல்வாழ்வைப் பொறுத்தது என்பதை உணர்ந்து, அவர் தம்மை வறுமையை ஓட்டி, அதன் மூலம் அவர்களெல்லாம் நோயற்ற வாழ்வு வாழச்செய்தலே முறை. இந்த மகத்தான உண்மைகளைத்தன் உள்ளடக்கியிருக்கிறது. டாக்டர் குருசாமியின் பேச்சு.

பர்மா அரிசி ஏற்றுமதி அதிகரிப்பு

ரங்கூன், ஏப். 7—

சென்ற இரண்டு வாரங்களாக பர்மாவின் ஏற்றுமதிகள் முக்கியமாக அரிசி ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது.

பர்மாவின் பல பாகங்களில் கலகங்கள் ஒடுக்கப்பட்டதால், கலகக்காரர்கள் வசமிருந்த அரிசி ஸ்டாக்குகள் சர்க்கார் வசம் சிக்கின. அதன் காரணமாகவே இந்த ஏற்றுமதி அளவு அதிகரித்திருக்கிறது.

குருடர்கள் சமையலுக்குத் தனி 'குக்கர்'

லண்டன், ஏப். 7—

கண்களை இழந்த பெண்கள் தாங்களே பிறர் உதவியின்றி சமைத்துக் கொள்வதற்காக, ஒரு விசேஷ சாதனங்கள் கொண்ட குக்கர் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

காது, கை இவைகளின் மூலமே சமையலானதைத் தெரிந்து, அடுப்பிலிருந்து பாத்திரங்களை இறக்க முடியுமாம்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

9 - 4 - 50

கோவை:—ஏ. சித்தையன், கிருட்டினசாமி.
திருவாதவூர்:—ஏ. வேலுச்சாமி, எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம்.
அரியலூர்:—டி. கே. சீனிவாசன், ஏ. பி. தர்மலிங்கம்.
சித்தாலந்தூர்:—என். கே. பி. வேல், என். பி. சதாசிவம், டி. ஜி. கணபதி.
குல்லலக்குண்டு:—சி. பி. சிற்றரசு, முத்திருளாண்டி.

11 - 4 - 50

மேலக்கோட்டை (சின்னையாபுரம்):—எஸ். தங்கச்சாமி, ஈ. வெ. அ. வள்ளிமுத்து, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். எஸ். ராமசாமி.

ஸ்டாலின் உருவத்தை தீட்டிய ஓவியர்

—(0)—

தான்பெற்ற அனுபவத்தைக் கூறுகிறார்

லண்டன், ஏப். 7—

ஸ்டாலினின் உருவத்தை அப்படியே எழுதிய லண்டன் ஓவியர் எர்னஸ்ட் நார்லாண்ட், இப்பொழுது லண்டனில் சித்திரக் கண்காட்சி ஒன்றை நடத்துகிறார்.

இவர் ஸ்டாலின் உருவத்தை வரைந்த அனுபவத்தை, ஈவினிங் ஸ்டாண்டார்ட் வெளியிட்டிருக்கிறது

1935-ல் இவர் மாஸ்கோவுக்கு சென்றிருந்தபொழுது ஸ்டாலின், தான் பட[illegible] கொடு[illegible] ருந்தார்[illegible] பதில் எதவும் கிடைக்கவில்லை. ஒருநாள் அதிகாலையில் இருரஷ்ய ஸோல்ஜர்கள் அவரை தூக்கத்திலிருந்து எழுப்பி கிரெம்லினுக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு சென்றபோது ஸ்டாலினையும், அப்போது காமின்பார்ம் தலைவராக இருந்த டிமிட்ராவையும் சேர்த்துப் படம் எழுதவேண்டும் என்றும், ஸ்டாலின் அதிபர் டிமிட்ராவ் அவருடைய லெப்டினென்ட் என்பது படத்திலிருந்து தெரியவேண்டும் என்பதுடன், இருவர்களுக்குள்ள தோழமையும் வெளிப்படவேண்டும் என்று அந்த ஓவியரிடம் கூறப்பட்டது

நான்கு தடவை தடவைக்கு ஒரு மணி நேரம் ஸ்டாலினும் டிமிட்ராவும் போஸ் கொடுத்தனர். படம் எழுதி முடிந்து கொடுக்கப்பட்டபின் அந்த ஓவியர் மீண்டும் கிரெம்லினுக்கு அழைக்கப்பட்டார்.

தான் எழுதிய படம் இரண்டாக்கப்பட்டு ஸ்டாலின் வேறு டிமிட்ராவ் வேறாக செய்யப்பட்டிருந்தது. அப்படி இரண்டாகப் பிரித்ததில் ஸ்டாலின் கை வெட்டப்பட்டுவிட்டதால் அதைச் சீர்படுத்தும்படி ஓவியருக்கு உத்திரவிடப்பட்டது. படம் எழுத ஆரம்பிக்கும்போது ஸ்டாலின் டிமிட்ராவ் உறவு சௌஜன்யமாக இருந்தது. படம் முடியும்போது உறவு முறிந்துவிட்டதெனத் தெரிகிறது.

சீனாவில் பஞ்சமாம்

லண்டன், ஏப். 7—

தென்சீனாவில் கொடுமையான பஞ்சம் இருந்துவரும் சமயத்திலும் ரஷ்யாவுக்கும் கம்யூனிஸ்டு சீனா உணவு சப்ளை செய்து வருவதாக, சீனா தேசிய வட்டாரங்களில் கூறப்படுகிறது என்றும், இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் சீன கம்யூனிஸ்டுகள் தன் மக்களுக்கே துரோகம் செய்பவர்களாக ஆவர் என்றும் மாஞ்செஸ்டர் கார்டியன் எழுதியிருக்கிறது. பஞ்சக் கொடுமையை சீன கம்யூனிஸ்டு பத்திரிகைகள் மறைத்து வருவதாகவும் அது எழுதியிருக்கிறது.

மேற்கு ஜெர்மனியில் கம்யூனிசம்

லண்டன், ஏப். 7—

கிழக்கு ஜெர்மனியிலுள்ள கம்யூனிஸ்டு தலைவர்கள் மேற்கு ஜெர்மனியில் கம்யூனிஸத்தை பரப்புவதற்காக, முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இதற்கு முதல் படியாக டஸ்ஸெல் டிசயால் ஏப்ரல் 23வ[illegible]சாரக் கூட்டம் நடத்த[illegible] செய்யப்பட்டிருக்கிறது. மேற்கு ஜெர்மனியில் ஆயுத உற்பத்தி செய்வதையும், அமெரிக்காவிலிருந்து ஆயுதம் இறக்குமதி செய்வதையும் கண்டித்து, பிரசங்கங்கள் செய்யப்படும் என்று தெரிகிறது.

ஜெர்மானியர்கள் மீது கருணை காட்ட ஆரம்பித்துள்ளது ரஷியா. ஜெர்மன் யுத்தக் கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்க ரஷ்யா முன் வந்திருக்கிறது. மேற்கு ஜெர்மானியர்களுடன் ரஷ்யர் நெருங்கி உறவாடவும் ஆரம்பித்திருக்கின்றனர்.

தொழிலாளர் கூலி விகிதம் அதிகரிக்கிறது

லண்டன், ஏப். 7—

பிரிட்டனில் தொழிலாளர் வாங்கும் வாராந்தரக் கூலி 1938ல் 2 பவுண்டு 13 ஷில்லிங் 3 பென்ஸாக இருந்தது. இப்பொழுது 6 பவுன் ஒரு ஷில்லிங் 9 பென்ஸாக உயர்ந்திருக்கிறது.

நல்ல சம்பளம் வாங்குபவர்கள் துறைமுகத் தொழிலாளர்களும், சுரங்கத் தொழிலாளர்களுமே.

ஹாலிவுட் வாழ்க்கை ஆகாதப்பா!

லண்டன், ஏப். 7—

ரிச்சர்ட் டாட் என்ற பிரிட்டிஷ் நடிகர் ஹாலிவுட்டில் ஒரு படத்தில் நடித்துவிட்டு திரும்பியிருக்கிறார்.

அவர் ஹாலிவுட் பற்றி கூறியதாவது:—

ஏதோ ஜனத்தொகை அதிகரித்த ஒரு கிராமம் போல ஹாலிவுட் இருக்கிறது. மக்கள் இதரர்கள் விஷயம் பற்றி அதிகம் பேசுகிறார்கள். யாராவது ஒரு நடிகர் அல்லது நடிகை ஏதாவது சொல்லிவிட்டால் போதும். அதை நிருபர்கள் உடனே வெளியுலகுக்கு பரப்பிவிடுகிறார்கள். அப்படிச் சொல்லவில்லை என்று நாம் மறுக்க முன் வந்தால், நிலைமை இன்னும் மோசமாகிவிடும். மறுக்காமல் இருந்தாலோ நீங்கள் அப்படித் தான் சொன்னதாக எல்லோரும் நம்பிவிடுவார்கள்.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு பெண்கள் மாநாடு

12-4-50 புதன்மாலை 3 மணிக்கு

சென்னை

கோகலே மண்டபத்தில்

திராவிட முன்னேற்றக் கழக சார்பாக நடைபெறும்

அலமேலு அம்மாள்

மாநாட்டு அமைப்பாளர்.

பிரிட்டனுக்கு இந்தியக் கம்பளம்

லண்டன், ஏப். 7—

இந்தியாவிலிருந்தும், ஆஸ்திரேலியா, ஸ்காண்டிநேவியா, தென் மேற்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் கம்பளங்களைப்பிரிட்டனில் இறக்குமதி செய்ய இதுவரை இருந்துவந்த 'கோட்டா' கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிட்டன இதனால்காமன்வெல்த் டாலர் வருமானம் அதிகரிக்கும் என்றும் தெரிகிறது.

இப்பொழுதுகம்பளம், அதனால் செய்யப்பட்ட பொருள்களை எந்த இடத்திலிருந்து வேண்டுமானாலும் பிரிட்டிஷ் வியாபாரிகள் கருவிக்கலாம். நெய்யாத உதிரி ரோமத்தையும் ரஷ்யாவிலிருந்து இவர்[illegible] எவ்விதக்கட்[illegible] [illegible]முக்க மு[illegible] [illegible]னுல்யுத்த[illegible] இழந்த சர்வதேசக் கம்பள மார்க்கட்டை மீண்டும் பிரிட்டன் பெற முடியும் என்று சொல்லப்படுகிறது. அமெரிக்கர்கள் இதுவரை கம்பளங்களை ரஷ்யாவிலிருந்து நேரிடையாக வாங்கிவந்தனர். அவர்கள் இனி பிரிட்டனிலிருந்தே வாங்குவர்.

கலைக்கூடத்திற்கு கவர்னர் வருகை

சென்னை, ஏப். 7—

நேற்றுமாலை சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா தன் மனைவியுடன் அடையாறு கலைக்கூடத்திற்கும், பெஸண்ட் திவ்யாலயத்தில் உயர்நிலைப் பள்ளி வருகை தந்தார்.

கலையின் டைரக்டர் தோழியர் ருக்மிணிதேவி தலைமை ஆசிரியர் கிருஷ்ணாத்னம், அருண்டேல் மாண்டிஸோரி பயிற்சிப் பள்ளி தலைவர் தோழர் ஸ்ரீலோபிகார் கலை நிபுணர் தோழர் சீனிவாசலு கவர்னர் தம்பதிகளைவரவேற்றனர்

கலைப்பயிற்சி வகுப்பில் சிறுவர் சிறுமியர் சிற்பவேலை, சித்திரம் எழுதுவது முதலியவைகளில் ஈடுபட்டிருப்பதைக் கவர்னர் கண்டார்

களிமண்ணால் உருவம் செய்வது பிரம்பு வேலை, நச்சு வேலை, பொம்மை செய்வது முதலியவைகளை அப்பள்ளி மாணவர்கள் மிகத் திறமையுடன் செய்து காட்டியதை கவர்னர் கண்டுகளித்தார்.

லண்டனில் காமாலை வியாதி பரவுகிறது

லண்டன், ஏப். 7—

லண்டனில் காமாலை வியாதி அல்லவென்றும் வேறு ஒரு வகையான காமாலை வியாதி என்றும், இது தொத்து நோய்குணமுள்ளது என்றும் கூறப்படுகிறது.

பீல்ட் மார்ஷல் வேவலும் இந்த வியாதியினால் அவதிப்படுகிறாராம்.

செவிடருக்கும் கல்வி

செவிடாகிவிட்ட குழந்தைகளுக்குப் படங்களைக் காட்டி சிறிய வார்த்தைகளாகக் கூறிக் கல்வி கற்பிக்கப்படுகிறது. வாஷிங்டனிலுள்ள பயிற்சி சாலையில் 4 வருடங்களில் செவிட்டுக் குழந்தைகள் நன்றாகக் கல்வித் தேர்ச்சியடைந்துவிடுகின்றனவாம்.

மலேயா சுதந்திரம் நம்பிக்கை வளருகிறது

குலாலம்பூர், ஏப். 7—

மலேயாவுக்குச் சுயாட்சி அளிக்கும் திட்டத்தைக் குறித்து "ஒயிட் ஹால்" ஆலோசித்துவருவதாக இங்கு கூறப்படுகிறது. இதன்படி பெடரேஷனில் நிர்வாகக் கௌன்ஸில் மந்திரிசபையாக அந்தஸ்து உயர்த்தப்படுமாம். லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் உத்போக பற்றற்றவர்களுக்கு [illegible]ம் அளிக்கப்படுமாம்.

[illegible]இலாகா பொறுப்புகளை வகிக்கும் பிரதிநிதிகள் அரசியல் ஸ்தாபனங்களினாலும், இதர ஸ்தாபனங்களினாலும் நியமிக்கப்படுவர். இவர்களில் 5 பேர் ஆசியாக்காரர்கள். மூவர் மலேயர்கள், ஒரு சீனர், ஒரு இந்தியர் இருப்பராம்.

மலேயாவில் பிறந்த எல்லோருக்கும் பிரஜா உரிமை வழங்க இத் திட்டத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது

மலேயா சுல்தான்கள் கூடி ஆலோசித்து வகுத்த திட்டத்துடன் ஹைகமிஷனர் தோழர் ஹனரிகுர்னேயும் திட்டமும் சேர்த்து ஒயிட் ஹாலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது

மலேயாவுக்குப் பூரண சுதந்திரமளிப்பதற்கு இது ஒரு படி என்று கருதப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கு இந்திய நிலக்கரி

ஸிட்னி, ஏப். 7—

ஆஸ்திரேலியாவுக்கு 850,000 டன் நிலக்கரி சப்ளை செய்ய இந்தியா, தென் ஆப்பிரிக்காவின் டெண்டர்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றனவென்று இங்கு தெரியவருகிறது.

இந்த சப்ளை செய்வதற்கு 27 நாடுகள்டெண்டர் சமர்ப்பித்திருந்தன.

புழுதி மழை

டான்வில்லி, ஏப். 7—

வர்ஜீனியாவுக்கருகில் புழுதி கலந்த மழை பெய்ததாகக் கூறப்படுகிறது. ஏராளமான புழுதி காற்றுடன் கலந்து மேகத்துடன் சேர்ந்ததால்தான் இம்மாதிரி புழுதி மழை பெய்ததாகக் கூறப்படுகிறது.

இனி நடப்பவை

சென்னை, புளியந்தோப்பு:—9—4—50 ஞாயிறு காலை 10 மணிக்கு தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் ஜி. நாராயணசாமி அவர்களின் தலைமையில், கழக மாதாந்திரக் கூட்டம் நடைபெறும்.

* * *

சென்னை, புரசைவாக்கம்:—தி. மு. கழகத்தின் செயற்குழுக் கூட்டம், 10-4-50 7-30 மணிக்கு புரசை சுந்தரம் தையற் கடையில் நடைபெறும்.

* * *

சென்னை:—9-வது வட்ட (ஏழு கிணறு) தி. மு. கழக நிர்வாகக் குழு ஆலோசனைக் கூட்டம் 9-4-50 ஞாயிறு காலை 11 மணிக்கு 5. மந்தசா மேஸ்திரி தெருவில் நடைபெறும்.

* * *

சென்னை, தேனாம்பேட்டை:—நாடகக் கழகத்தின் சார்பில் காங்கிரஸ் மைதானத்தில் 8—4—50 அன்று மாலை தோழர் எம். கே. தியாகராசபாகவதரின் இன்னிசை விருந்து நடைபெறும்.

* * *

சென்னை, திருவல்லிக்கேணி:—9-4-50 அன்று காலை 10-மணிக்கு இக்பர் வ. உ. சி. இளைஞர் மன்றத்தின் சார்பில் சொற்பயிற்சி நடைபெறும். அதுபோது தோழர் வி. எஸ். பார்த்தசாரதி தலைமை தாங்குவார். சாத்திரம் யார்? ஆத்திகம் எது? என்னும் பொருள் பற்றி பலத் தோழர்கள் பேசுவர். இடம்:—நூ. அருணகிரித் தெரு, என். 3. மீர்சாப்பேட்டை, ராயப்பேட்டை.

* * *

ஆற்காடு:—9—4—50 அன்று மாலை 6-மணிக்கு தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் முன்னிபண்ணு தையல் அலுவலகத்தில் நடைபெறும். அதுபோது தலைமைக் கழக கட்டிட நிதி பற்றி ஓர் உதவி நாடகம் நடத்த ஆவன செய்ய வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் தவறாது வர வேண்டப்படுகிறது.

கத்தி முனையில் காதல்!

பாரிஸ், ஏப். 7—

ஒரு ஆடவனைக் காதலித்த யுவதிகளுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டதால், ஒருவள் குத்துக்காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள்.

நாத்தை ஈவும் ஒத்த சிறு அரத்தினால் ஒருவள் மற்றொருவளை குத்திவிட்டதாகத் தெரிகிறது.

கழக நடவடிக்கைகள்

கள்ளிக்கோட்டை (மலையாளப் பகுதி):—இவ்வூர் தி. மு. க. செயற் குழுக்கூட்டம் 28-3-50 வியாழன் மாலை 7-30 மணிக்கு தோழர் பி. கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செயலாளர் நன்றிகூற கூட்டம் 8-30 மணிக்கு முடிவுற்றது.

* * *

நாகமநாயக்கன்பட்டி :- 27-3-50 அன்று இவ்வூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் கூடியது. விரைவில் கழகப் பொதுக் கூட்டம் ஒன்று உடனடியாக வெள்ளகோவிலில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

அதுபோது எனைய செயற்குழுவை மாற்றியமைக்கப்பட்டது. எனைய செயற்குழு உறுப்பினர்கள்:—அ. வீராசாமி, வி. ஆறுமுகம், அப்பாவு, குப்புசாமி, கே. குமாரசாமி, கே. ராமசாமி. முடிவாக நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

வடக்கப்பட்டி:—29 3-50 அன்று இவ்வூர் தி. மு. க. கிளை நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் தோழர் வி. என். நத்தப்பன் தலைமையில் கூடியது. அதுபோது சில அனுதாபத்தீர்மானங்களும் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

சர்க்கார் புறம்போக்கு நிலங்களை பயிரிட நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு உரிமை கொடுத்து ஆதரிக்கவேண்டுமென்று சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

அம்பலூரில் எத்தனையோ அபிப்பிராயத்தில் இருந்துவரும் ஓர் உயர்தரப் பாடசாலையும், வைத்தியசாலையும் உடனடியாகத் திறக்க வ. ஆ. ஜில்லா, போர்டாரை இக் கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

வ. ஆ. மாவட்ட தி. மு. கழகத்திற்கு இக்கிளையின் பிரதிநிதிகளாக தோழர்கள் சுப்ரமணியன், நத்தப்பனைத் தேர்ந்தெடுத்து கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சேப்பாக்கம், சென்னை:—26—2—50 ஞாயிறு காலை 10-30 மணிக்கு அருணாசலஆச்சாரிதெரு 13 செ. மாடியில் இங்குள்ள தி. மு. க. செயற்குழுவினர் கூட்டம் தோழர் எஸ். எல். ராமுவின் தலைமையில் கூடியது. அதுபோது சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

* * *

அருப்புக்கோட்டை :—31-3-50 அன்று நிரசராம வாலிபர் சங்கக் கட்டிடத்தில் தோழர் சு. காசிமுத்து அவர்கள் தலைமையில் கூடிய தி. மு. க. செயற்குழுக்கூட்டத்தில் 3-1-50 நான் நடந்த கழகத் துவக்கவிழா நன்கொடை வரவு செலவு சரி பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது. அஞ்சாநெஞ்சன் அழகிரி நான் பொதுக் கூட்டம் நடத்தத்தீர்மானிக்கப்பட்டது.

நன்கொடைவரவு ரூ.	467-12 0
துவக்கவிழாசெலவு ரூ.	350-13-0
நீக்கி இருப்பு ரூ.	116-14-0

மீதி ரூபாய் 116-14-0-யை கழக நிதியில் சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

* * *

மதுரை:—2-4-50 அன்று மாலை 7 மணிக்குக் கூட்டம் கழகச் செயலாளர் தோழர் முத்தையா அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. தோழர் சாம்பசிவம் அவர்கள் வாழ்க்கைத் துணை நலம் என்னும் பொருள் பற்றியும், தோழர் வெ. கைலாசம் அவர்கள் "இன்பத்துள் இன்பம்" என்னும் பொருள் பற்றியும், சொற்பொழிவாற்றினார்கள். பின், கூட்டம் நன்றி கூற இனிது முடிந்தது.

கொளத்தூர் :—27-3-50 இரவு இவ்வூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் செயலாளர் இல்லத்தில் கூடியது. அதுபோது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் கே. குருசாமி, தி. அனந்தராசு ஆகியோர்தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

* * *

சச்சமங்கலம்:—இவ்வூர் தி. மு. க. செயற்குழு உறுப்பினர் குழுக் கூட்டம் தோழர் முத்தீஸ்வரன் தலைமையின் கீழ் 1-4-50 சனிமாலை நடைபெற்றது. அதுபோது தோழர் தி. இரா. சுந்தரனம், 'திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரும், உள்ளூர் கழக ஆலோசகராகவுமிருந்த தோழர் அ. கோ. சுவாமி அவர்களது திடீர் மறைவு குறித்து இக்கூட்டம் வருந்துவதோடு அவரது பிரிவால் வருந்தும் அன்னாரது, குடும்பத்தாருக்கு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசினர். இதைஆதரித்தும்மறைந்த தோழரதுமாண்புகள் குறித்தும் தோழர்கள் மு. அரங்கராசன், அருந்தமிழ்த்தோழன் ஆகியோர் பேசினார்கள். தீர்மானத்தை நிறைவேற்ற முகத்தானும், மறைந்தவருக்கு மரியாதை செலுத்தும் முறையிலும் இரண்டு நிமிடம் மௌனமாக இருந்து கூட்டம் முடிவுற்றது.

* * *

கோவை, ராமநாதபுரம்:—தி. மு. கழகசார்பில் கழகக்கட்டிடத்தில் மேல்மாடியில் 3—4—50 [illegible] செயற்குழுக்கூட்டம்நடைபெ[illegible] கோவை முரசு ஆசிரியர் தோ[illegible] எஸ். ஏ. மாணிக்கம் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் முகவுரையாக, கட்சியின் ஆக்கவேலைகளைக் குறித்தும், உறுப்பினர்கள், இப்பகுதியில் அதிகம் சேர்க்க வேண்டியதைக் குறித்தும், சொற்பொழிவு நிகழ்த்தினர்.

இப்பகுதியிலுள்ள தோழர் அண்ணாத்துரை நூல் நிலயத்தையும், இளைஞர் நலம்புரிக் கழகத்தையும் இந்த தி. மு. கழகத்துடன் இணைத்துவிட வேண்டும் என வற்புறுத்திப் பேசினர். செயலாளர் தோழர் ஆர். பழனிச்சாமி நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

வேண்டுகோள்

தோழர்களே! நம் கோவை மாவட்டத்தில் நல்ல முறையில் அமைப்புமுறை ஏற்படுத்த வேண்டுமெனக் கருதி ஈரோடு, தாராபுரம்; காங்கயம் ஆகிய பகுதிகள் என் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் இந்த நான்கு பகுதிகளிலும் உள்ள தி. மு. க. தோழர்கள், கழகங்கள் அமைக்காத ஊர்களை ஒரு வாரத்திற்குள் எனக்குத் தெரிவிக்கவேண்டுகிறேன். தாராபுரம் காங்கயம் ஆகிய பகுதிகளில் விரைவில் பிரச்சாரகர் ஒருவரை அழைத்து கூட்டங்கள் நடத்தவேண்டும் என்று இருப்பதால், அப்பகுதித் தோழர்கள் இது குறித்துப் எழுத வேண்டுகிறேன். மே மாதம் முடிவுக்குள்கம் நான்கு பகுதிகளிலும் தி. மு. கழகங்களை அமைத்துவிடவேண்டும் உடனே அன்பு கூர்ந்து எழுதுங்கள்.

என். இ. பாலகுரு
தி. மு. க. அமைப்பாளர்
பட்டக்காரர் பங்களா
ஈரோடு

ஆசிரியருக்கு முடங்கல்

லஞ்சம் மிஞ்சுகிறது!

ஐயா,

நமது 'அறிவுள்ள' அரசாங்கம் இதை அறியட்டும். ரெண்ட் கண்ட்ரோல் என்று ஒரு சட்டத்தை உண்டாக்கி அதன்மூலம் கொள்ளை அடிக்கும் சிப்பந்திகளையும் உண்டாக்கி வியாபாரத்திற்கும் நேர்மைக்கும் நாட்டில் இடமில்லாமல் செய்து, பொதுமக்கள் பணத்தை வாணவேடிக்கை விட்டுப்பார்க்கும் நம் அரசியலார் இதை அறியட்டும் என்றே இதை எழுதுகிறேன்.

நான் ஒரு வாடகைக் கட்டிடத்தில் கடைவைத்திருக்கும்வியாபாரி, வீட்டுக்காரர் அதிக வாடகைக் கேட்டார், நான் கொடுக்க மறுத்து எப்பொழுதும் கொடுக்கும் வாடகையையே கொடுத்தேன். அவர் வாங்க மறுத்தார். அதன்பேரில் ஒவ்வொரு மாதமும் மணியார்டர் மூலமாக வீட்டு வாடகையை அனுப்பிவந்தும் அவர் வாங்கிக் கொள்ள மறுத்து, மணியார்டரை திருப்பி அனுப்பிவிட்டார். அதன் பிறகு கட்டிட வாடகை எவ்வளவு பாக்கி என்று கேட்டு வக்கீல்மூலம் வீட்டு சொந்தக்காரர் ஒரு நோட்டீஸ் விட்டிருந்தார். நேர்மைக்காக எவ்வளவு பாக்கியோ அதைச், சொன்னேன் அதன்பேரில் கோர்ட்டில் கேஸ் போட்டு ரூ. 206 க்கு டிகிரி ஆகி. கடையைக் காலிசெய்யும்படி தீர்ப்பு செய்யப்பட்டது. அப்பீல் செய்ததில் நான் மணிஆர்டர் செய்ததைக் கண்டு ரூ. 1-4-0 தான் பாக்கி என்றும், அதனால் கடையைக் காலி செய்துவிடும்படி தீர்ப்புக்கூறப்பட் [illegible] அதனால் 5 ஆண்டுகளாக வைத் [illegible] [illegible] மறுபடி ஹைக்கோர்ட்டு [illegible] பீல் செய்ய டிகிரி காப்பிக்கு மனுப் போட்டிருந்தேன். மனுப்படி காப்பி இன்னும் என் கைக்குவரவில்லை. இதே தேதியில் அடுத்த வீட்டு சொந்தக்காரர் டிகிரி நகலுக்கு மனுப்போட்டிருக்கிறார். அதுசமார் 10 நாட்களுக்கு முன் அவருக்குக் கிடைத்திருக்கிறது. இதிலிருந்து யார் லஞ்சம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குஎதுவும்முன்னாலேயே கைகூடும் என்று எண்ணவேண்டியிருக்கிறது. எனக்குப் பிறகு எவ்வளவோ பேர் மனுசெய்து நகலும் பெற்று விட்டார்கள். எனக்கு மாத்திரம் இன்னும் கிடைத்தபாடில்லை.

இதுதவிர கடையைக் காலிசெய்யத் தவணைக் கேட்டால் கொடுப்பது வழக்கம். இதை அனுசரித்தே நானும் சும்மாயிருந்தேன். இது கோர்ட்டில் நடைமுறையில் நடக்கும் சம்பவம். ஜட்ஜுகள்கூட லஞ்சத்துக்கு ஆசைபட்டு குடி இருப்பவர் எவ்வளவு பெரிய வியாபாரியாய் இருந்தாலும் அல்லது எவ்வளவு பெரிய அந்தஸ்துள்ளவராய் இருந்தாலும் குடிஇருப்பவருக்குத் தெரியபடுத்தாமல் வீடு உடைந்த சாமான்களை வீதியில் எறியும்படி உத்தர விடுவார்கள்போல் தெரிகிறது. ஏனெனில், நான் கடையில் இல்லாத சமயத்தில் கடையில் இருந்த சாமான்களை வீதியில் எறியப்பட்டுவிட்டன. சுமார் ரூ.2000/- மதிப்புள்ள சாமான்களும் கோர்ட்டு சிப்பந்திகளால் களவாடப்பட்டு விட்டன. என்னுடைய பொருள், வியாபாரம், அந்தஸ்து அத்தனையும் பாழாக்கிய நமது காருண்ய மிகுந்த சர்க்கார் இதைக் கவனிக்குமா?

இப்படிக்கு
எம். ஆர். பாண்டியன்,
பாண்டியன் டிரேடிங்,
25 எம். சி. ரோடு வண்ணாரபேட்டை

லண்டன், ஏப். 6—

20 அமெரிக்க 'கோடீஸ்வரர்கள்' உள்பட 561 அமெரிக்க, கனடிய பிரமுகர்கள் பிரிட்டனுக்கு உல்லாச பிரயாணமாக வந்ததில் பிரிட்டனுக்கு 70 லக்ஷம் டாலர் வருமானம் கிடைத்திருக்கிறது. —ரூனேப்

திருவள்ளுவர் இளைஞர் கழகம்
முத்தியாலுப்பேட்டை

முதல் ஆண்டு விழா

9—4—50 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

பிரபாத் டாக்கீசிற்கு அருகாமையிலுள்ள ஜீல்ஸ் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்திற்கு முன்னர் கழக முதலாவது ஆண்டு விழா நடைபெறும்

தலைவர் :—திரு. மா. இராசமாணிக்கம் B. O. L., M. O. L.
பரிசளிப்போர் :—திரு. ரா. பி. சேதுப்பிள்ளை B. A., B. L.
பேச்சாளர் :—திரு. இரா. நெடுஞ்செழியன் M. A.

அனைவரும் வருக! ஒலிபெருக்கி உண்டு.

குறிப்பு :—இக் கழகச் சார்பில் ஞாயிறுதோறும் காலை 10-மணிக்கு புதுத் தெரு, 94-95 ராஜமன்னார் துவக்கப் பள்ளியில் திருக்குறள் வகுப்பு நடைபெறுகின்றது. எல்லோரும்வகுப்பில்கலந்துபயனடையுமாறுவேண்டுகின்றோம்.

மேற்கு ஐரோப்பாவின் நெருக்கடி ஏற்படும்?

அமெரிக்காவின் கவலை

லண்டன், ஏப். 6—

அட்லாண்டிக்கு இருபுறமுள்ள அரசியல்வாதிகள் யுத்தம் சமீபத்தில் வராது என்று கருதிய போதிலும், ரஷ்யாவின் போக்கிலிருந்து வரும் கோடையில் ஒரு பெரும் நெருக்கடி மேற்கு ஐரோப்பாவில் ஏற்படும் என்கிற கவலை இருப்பது காணப்படுகிறது என்று ரூனேப் நிருபர் கூறுகிறார்.

புடாபெஸ்டில் ரஷ்யா கோஷ்டிகளின் ராணுவ மந்திராலோசனை, பெர்லினில் அமைதியின்மை டிட்டோவை ஒழித்துக்கட்டுவதாக ரஷ்ய ஜெனரல் வரோஷிலாவ் வீராப்பு முதலியவையே இக் கவலைக்குகாரணமென[illegible]

ஆசியாவில் கம்யூனிசம் பரவுவதை மறைக்கவே ஐரோப்பிய முனையில் ரஷ்யா இந்த நெருக்கடி குழப்பம் நிலைமையை ஏற்படுத்த முயற்சிப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இவ்விஷயம் பற்றி மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகை எழுதுவதாவது:—

இந்த நெருக்கடி விஷயமாக மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு மந்திரிகள் பெரும் கவலையுடனேயேதான் இருக்கின்றனர். புடாபெஸ்ட் மாநாட்டில் ரஷ்யாவும் அதன் கூட்டாளிகளும் என்ன முடிவுசெய்யப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. இம்மாநாட்டின் சில ராணுவ அதிகாரி அல்பேனிய சேனாதிபதி ஸ்பானிஷ் கம்யூனிஸ்டு ஜெனரல் லிஸ்டர் ஆஸ்திரியாவிலுள்ள சோவியத் சேனாதிபதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

வரோஷிலாவ் டிட்டோவை ஒழித்துக் கட்டிவிடுவதாக கூறியிருப்பது டிட்டோவைபயமுறுத்துவதற்காகவே என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்காவின் கவலை

யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரதிநிதித்துவ சபை ராணுவக் கமிட்டி தலைவர் கார்ல்வின்ஸன் விடுத்துள்ள அறிக்கையில் ரஷ்யர்கள் மாபெரும் விமானப் படையை அமைத்து வருகிறார்கள் என்றும், யுத்த விமானங்களுக்கு அமெரிக்கா 58,3000,000 டாலர்கள் ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அட்லாண்டிக் ஒப்பந்தநாடுகளின் மந்திரிகள் கூட்டத்திற்கு சென்று விட்டுத் திரும்பிய யுனைடெட் ஸ்டேட்ஸ் பாதுகாப்பு மந்திரி லூயிஜான்ஸன் அமெரிக்காவின் யுத்த விமான செலவைக் கவனிக்கும்படியும், அவசியமானால் விமானப் படையைப் பலப்படுத்த அதிகமாக செலவழிக்கும்படியும் கூறியிருக்கிறார்.

டில்லி பேச்சுவார்த்தைகள்

லண்டன், ஏப். 7—

புதுடில்லியில் இந்தியப் பிரதம மந்திரிக்கும் பாகிஸ்தான் பிரதம மந்திரிக்குமிடையே நடைபெறும். பேச்சு முடிவுகளை மிக ஆவலுடன் லண்டனிலுள்ள இந்தியர் பாகிஸ்தானிகள் எதிர்பார்த்து வருகின்றனர்.

வங்கத்திலுள்ள மைனாரிட்டிகள் பாதுகாப்பு விஷயம் பற்றி ஒரு சமரச ஏற்பாடு கொண்ட கூட்டறிக்கை சீக்கிரமே வெளியிடப்படலாம் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஒயிட் ஹாலும் இந்தப் பேச்சுகளையும் மிக வையும்மிகவும் அக்கரையுடன் கவனித்து வருகிறது.

[illegible] களைக் [illegible]

லண்டன், ஏப். 7—

லண்டனில் ஈஸ்டருக்காக விடுமுறைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா ஹவுஸ் மூடப்பட்டிருக்கிறதென்றாலும், ஜவுளிக் கண்காட்சியை நடத்த சிலர் மட்டும் வேலை செய்கின்றனர். ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ணமேனன் விடுமுறை நாட்களிலும் வேலை செய்து வருகிறார்.

அநேக இந்தியர்கள் இவ்விடுமுறைகளைக் குதூகலமாக கழிப்பதற்கு லண்டனைவிட்டு கிராமங்களுக்குச் சென்றிருக்கின்றனர். சில மாணவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர்.

பாரிஸில் 'பாஷன்' திருடர்கள்

பாரிஸ், ஏப். 6—

சிமிடத்துக்கொரு புது நவநாகரிக 'பாஷன்' முளைக்கும் பாரிஸில், அவைகளை திருட்டுத்தனமாக தெரிந்துகொண்டு போட்டியாக நடத்தப்படும் உடை பாஷன் கடைக்காரர்களுக்கு, தெரிவித்துப் பணம்பெறும் கோஷ்டியினரைப் போலீசார் தேடிவருகின்றனர். இம் சதிரி வேலை செய்பவர்கள் அநேகமாக பெண்களே என்று கூறப்படுகிறது. —ரூனேப்

ஏஜெண்டுகளுக்கு!

மார்ச்சு 31-ந்தேதியுடன் இவ்வாண்டு கணக்கு முடிக்க வேண்டியிருப்பதால், நிலுவையுள்ள பாக்கி பூராவும் இம் மாதம் 10-ந்தேதிக்குள் அனுப்பித்தரவேண்டும். அப்படி அனுப்பத் தவறும் ஏஜெண்டுகளுக்குப் பத்திரிகை நிறுத்தப்படும் என்பதை கண்டிப்பாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர் : "மாலைமணி"

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.